2026 மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 60/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – சசி (எ) ஜெயச்சந்திரன் |
| தகப்பனார் பெயர்: | துரைராஜ் |
| ஊர்: | தேவாரம் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 45 |

06.03.2026

(2 வது எதிரி ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 1 வது எதிரி Video Conferece மூலம் PT Warrant–ல் ஆஜர்படுத்தப்பட்டார்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட சிறப்பு சார்பு ஆய்வாளர் திருமதி.காளீஸ்வரி மூலம் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, தேவாரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 27.02.2025 ம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் தோட்டத்திற்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது, தேவாரம், Over tank அருகே கூட்டமாக ஆட்கள் இருந்தார்கள். அங்கிருந்த போலீசார் என்னிடம் கையொப்பபம் கேட்டார்கள், நான் வெள்ளைத் தாளில் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்துக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்பட்டு புகாரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. போலீசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்துக்கொடுத்தேன். என்னை போலீசார் விசாரித்தார்கள். புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1–**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 27.02.2025ம் தேதி இரவு சுமார் 11.45 மணிக்கு நானும், முனியாண்டிப்பட்டி, பேச்சியம்மன்கோவில் தெருவை சேர்ந்த ராமர் மகன் விக்னேஷும் பெரிய கோவில் தேரு வழியே வரும்போது டாஸ்மாக் கடையில் வேலை செய்துவிட்டு வந்த சிவசந்துரு மற்றும் சிவசூர்யா ஆகியோர்கள் எங்களை வழிமறித்து அசிங்கமாக திட்டி, எங்களை கையால் அடித்து, உதைத்தும், சிவசூர்யா மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து என்னை ஓங்கி குத்தினார் என்றும், சற்று விலகிக்கொண்டதால் என்மீது கத்திப்படவில்லை என்றும், இல்லையென்றால் சிவசூர்யா என்னை குத்தி கொலை செய்திருப்பார் என்றும், நாங்கள் இருவரும் அங்கிருந்து தப்பி ஓடும்போது சிவசூர்யா கத்தியை காட்டியும், சிவசந்துரு கீழே கிடந்த பெரிய கல்லை தூக்கி காட்டி இருவரும் கொலை மிரட்டல் செய்து, ஓடிவிட்டார்கள் என்றும், வெளிப்படையான காயங்கள் இல்லாததால் சிகிச்சை எடுக்கவில்லை என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது நானும், எதிரிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிக்க அரசு தரப்பிற்கு எதிராக பொய்யாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து காவல்நிலையத்தில் நேரடியாக சென்று எழுத்துமூல புகார் கொடுத்துவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.03.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.06 18:16:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
06.03.2026

<u>2026 மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 60/2025</u>

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 – விக்னேஷ் |
| தகப்பனார் பெயர்: | ராமர் |
| ஊர்: | மூனாண்டிப்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 30 |

06.03.2026

(2வது எதிரி ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 1வது எதிரி Video Conferece மூலம் PT Warrant–ல் ஆஜர்படுத்தப்பட்டார்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட சிறப்பு சார்பு ஆய்வாளர் திருமதி.காளீஸ்வரி மூலம் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, மூனாண்டிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும், அவர்கள் எனது அக்கா மகன்கள் ஆவார்கள். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 27.02.2025ம் தேதி இரவு சுமார் 11.45 மணிக்கு நானும், அ.சா.1 ஜெயச்சந்திரனும் பெரிய கோவில் தேரு வழியே வரும்போது டாஸ்மாக் கடையில் வேலை செய்துவிட்டு வந்த சிவசந்துரு மற்றும் சிவசூர்யா ஆகியோர்கள் எங்களை வழிமறித்து அசிங்கமாக திட்டி, எங்களை கையால் அடித்து, உதைத்தும், சிவசூர்யா மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அ.சா.1யை ஓங்கி குத்தினார் என்றும், சற்று விலகிக்கொண்டதால் அ.சா.1–ன்மீது கத்திப்படவில்லை என்றும், இல்லையென்றால் சிவசூர்யா அ.சா.1–யை குத்தி கொலை செய்திருப்பார் என்றும், நாங்கள் இருவரும் அங்கிருந்து தப்பி ஓடும்போது சிவசூர்யா கத்தியை காட்டியும், சிவசந்துரு கீழே கிடந்த பெரிய கல்லை தூக்கி காட்டி இருவரும் கொலை மிரட்டல் செய்து, ஓடிவிட்டார்கள் என்றும், வெளிப்படையான காயங்கள் இல்லாததால் சிகிச்சை எடுக்கவில்லை என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது நானும், எதிரிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிக்க அரசு தரப்பிற்கு எதிராக பொய்யாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து காவல்நிலையத்தில் அ.சா.1 நேரடியாக சென்று எழுத்துமூல புகார் கொடுத்தார் என்றும், தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.03.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.03.06 18:17:03 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
06.03.2026